பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 04 2025 **WEDNESDAY 6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வக்ஃப் சட்டத்திருத்த மசோதா குறித்து தவறான தகவல்களை எதிர்க்கட்சிகள் பரப்புவதாக மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது.
- வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- மக்களின் கவனத்தை திசை திருப்பவே கச்சத்தீவு பிரச்சினையை திமுக கையில் எடுத்திருப்பதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும், நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Jadumani Singh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*----- இனி விரிவான செய்திகள் -*</u>

<<<<<>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா குறித்து தவறான தகவல்களை எதிர்க்கட்சிகள் பரப்புவதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குறை கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவை தாக்கல் செய்து அவர் பேசினார்.

இந்த சட்டத்திருத்த மசோதா இஸ்லாமியர்களின் மதவழிபாடு சார்ந்தது அல்ல என்று அவர் தெளிவுபடுத்தினார்.

வக்ஃப் வாரியத்தின் சொத்துக்களை கையாளுவதற்கான அம்சங்களே இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு சொத்துக்களையும் பறிக்கும் நோக்கம் இல்லை என்றும் திரு கிரண் ரிஜிஜூ திட்டவட்டமாக தெரிவித்தார்.

<<<<<>>>>

இதற்கிடையே, வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போதுள்ள வக்ஃப் சட்டத்தில் அவற்றின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு போதிய அம்சங்கள் இருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்

இதன் காரணமாக, அதில் திருத்தங்களை மேற்கொள்ள தேவையில்லை என்றும் அவர் அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

வக்ஃப் மசோதாவை திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>

தமிழக மீனவர்களின் நலனை காக்க திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது அதில் அங்கம் வகித்த திமுக, கச்சத்தீவை மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில்கொண்டே அரசியல் ஆதாயத்திற்காக இப்பிரச்சினையை திமுக கையில் எடுத்திருப்பதாக திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>

தமிழகத்தில் மகளிருக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், இதுபோன்ற சூழலில் மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில், கட்சத்தீவு பிரச்சினையை முதலமைச்சர் கையில் எடுத்திருப்பதாக குறை கூறியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆட்சிகாலத்தில்தான், மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த காங்கிரஸுடன் சேர்ந்து கச்சத்தீவு மீதான உரிமையை விட்டுக்கொடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டு 50 ஆண்டுகள் மவுனமாக இருந்துவிட்டு, தற்போது கச்சத்தீவை மீட்போம் என்று கூறும் திமுக – காங்கிரஸ் கட்சிகளை பொதுமக்கள் நம்பப்போவதில்லை என்றும் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<<>>>>>

ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், ஆன்லைன் சூதாட்டத்தினால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் ஆணவப்படுகொலைகள் தொடர்வதாகவும், இது கண்டனத்திற்குரியது என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு முத்தரசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதனை தடுப்பதற்கு தனிச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

<<<<<>>>>>

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு இன்று மதுரையில் தொடங்கியது.

நாடு முழுவதிலும் இருந்து இடதுசாரி தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை விஜயகரிசல் குளத்தில் நடைபெற்றுவரும் மூன்றாம் கட்ட அகழாய்வில் அரிய வகையிலான தங்கமணி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த அகழாய்வுப்பணிகளில் இதுவரை தங்கத்தால் செய்யப்பட்ட ஏழு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

நெல்லை மாவட்டம் சீவலப்பேரியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் 50 ஆண்டுகளுக்கு பிறகு திருத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெற்றது.

இதில், ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும், நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 47 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, திருவாரூர் மாவட்டத்தில் இன்று மிதமான மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் 20 அரசு அலுவலகங்களில் பொதுமக்களுக்கு இலவச நீர், மோர் வழங்கும் பணியினை ஆட்சியர் திரு கிருஸ்துராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

பெரம்பலூர் மாவட்டம் பூலாம்பாடி மற்றும் அரும்பாவூர் பேரூராட்சிகளில் வீட்டுமனை பட்டா வழங்க தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் இல்லங்களில் ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவர் குறைதீர் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என்று ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஸ்ரேயா குப்தா தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

சொத்துவரி வசூலில் நாமக்கல் மாநகராட்சி மாநில அளவில் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்ததையடுத்து, அதன் பணியாளர்களுக்கான பாராட்டு விழா இன்று நடைபெற்றது.

**<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Jadumani Singh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், இங்கிலாந்தின் **Ellis Trowbridge** –ஐ வென்றார்.

-----------------

**Phukat** சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Rounak Chouhan** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-6, 21-12 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Henrikho Wivowo Kho**-வை வென்றார்.

***<<<<<END>>>>***